மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது அரசாங்க உதவியைப் பற்றி அல்ல. அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய பணத்தை பொதுமக்களிடமிருந்து வசூலிப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்த முடியுமா என்று கேள்வி. ஆகவேதான், அதை உயர்நீதி மன்றத்தின் முடிவுக்கு விடவேண்டுமென்று சொன்னேன்.

திரு. கு. பெரியசாமி : தலைவரவர்களே, ரிஜிஸ்டர் செய்யப்பட்ட வக்கீல் குமாஸ்தாக்களுக்கு அடிப்படைச் சம்பளம் நிர்ணயிக்க அரசிடம் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. ஏ. சுவாமிதாஸ் : சார், வக்கீல்களுக்கு கட்சிக்காரர்கள் கொடுக்கிற தொகையை விட சில குமாஸ்தாக்கள் அதிகம் பெற்றுக் கொள்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையையும் கோர்ட் செலவில் சேர்த்துக்கொண்டால் கட்சிக்காரர்களுக்கு அது திரும்பிக்கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். அந்த அடிப்படையில் கணக்கில் அவர்கள் பெறும் தொகையையும் சேர்த்துக் கொள்ள முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வக்கீல்களையெல்லாம் கேவலப்படுத்துவது சரியல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, வக்கீல்களுக்கு கட்சிக் காரர்கள் கொடுக்கிற ஊதியத்தை விட குமாஸ்தாக்கள் அதிகமாகப் பெறுகிறார்கள் என்று கேள்வி எழுப்பப்பட்டது. பொதுவாக நல்ல வக்கீல் களுக்கு இந்தமாதிரி தகராறு ஏற்படாது. ஆதலால் அந்தமாதிரி கேள்வி தேவையில்லை என்ற கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுவாமிதாஸ் வழக்கறிஞர் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) ஆசிரியரா, அப்படியானால் அடுத்த துறையைப் பற்றி நீங்கள் இவ்வளவுதூரம் சொல்லக் கூடாது

ஆயுள் தண்டனை கைதிகள்

*** 591 வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள மத்திய சிறைகளில் தற்பொழுது உள்ள ஆயுள் தண்டனை கைதிகள் எத்தனை பேர் ?

(இ) அவர்களுள் மூன்றில் ஒரு பங்கு தண்டனையை அனுபவித்துள்ள வர்களை விடுதலை செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) 10—8—1972 அன்று தமிழ்நாட்டில் மத்திய சிறைகளில் இருந்த ஆயுள் தண்டனை கைதிகளின் எண்ணிக்கை 2,179.

(இ) இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 10—8—72 தகவல் தான் கொடுத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னால் வெள்ளிவிழாவின்போது அவர்களுடைய தண்டனைக் காலம் குறைக்கப்பட்டிருக்கிறதே, அந்த வெள்ளிவிழாவின்போது குறைக்கப்பட்டதன் அடிப்படையில் எத்தனை ஜன்மக் கைதிகள் விடுதலையாகி இருக்கிறார்கள், எப்போது குறைக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, கேரளத்திலே 7 ஆண்டு முடிந்தவுடன் ஆயுள் கைதிகளை விடுதலை செய்கிறார்கள். அதைப்போல இங்கும் செய்ய அரசாங்கம் ஏதேனும் செயற்குறிப்பை வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த மூலக்கேள்வியே இன்றைக்கு தமிழ்நாட்டிலுள்ள மத்திய சிறைகளில் எத்தனை ஆயுள் கைதிகள் இருக்கிறார்கள் என்பது. அமைச்சரவர்கள் 10—8—72-ல் உள்ள விபரத்தை மட்டும் சொன்னார்கள். அதன் பிறகு எத்தனை ஆயுள் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டார்கள் ? எத்தனை பேர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்பதை சொல்லவில்லை. ஆகவே, இப்போது இருக்கிற நிலைமையைப்பற்றி விவரங்கள் உண்டா இல்லையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி கேட்ட தேதியின் அடிப்படையிலே விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இந்த விவரம் கிடைக்கப்பெற்றப் பின்னால் மத்திய அரசின் உத்தரவின்பேரில் பலரை விடுதலை செய்திருக்கிறோம். ஆனால் எத்தனை பேர் என்ற விவரம் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், கைதிகளின் தண்டனையைக் குறைக்கும்போது சிறையிலே நடந்துகொள்ளும் ஒழுக்க முறைகளைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா அல்லது அவர்கள் செய்த குற்றத்தைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா? அல்லது அதற்கு முன்னால் அவர்கள் இருந்த நிலைமையைப் பார்த்து தண்டனை குறைக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறையிலே நடந்துகொள்ளும் முறை, குற்றத்தின் தன்மை இவைகளை எல்லாம் கணக்கிலே எடுத்து, தண்டனைக் குறைக்கப்படுகிறது.

Loans advanced to State Land Development Bank

*592 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the amount advanced as loan by the World Bank under the Scheme of International Development Agency for the year 1972 has been fully utilised by the Tamil Nadu State Land Development Bank ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கால அளவு 2½ ஆண்டு காலம். அது 1—11—1971-லிருந்து தொடங்கப்பட்டிருக்கிறது. 1972-ம் ஆண்டில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி 2.44 கோடி ரூபாய் அளவிற்குக் கடன்கள் வழங்கியிருக்கிறது. உலக வங்கி விதித்திருந்த சில கட்டுப்பாடுகளின் காரணமாக இவ்வளவு குறைவாகச் செலவழிக்க முடிந்திருக்கிறது. இப்போது கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டுவிட்டதால் வேகமாக பெருமளவில் செலவிடுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, ஏறத்தாழ 28 கோடி ரூபாய் உலக வங்கியிடமிருந்து பெற்றிருக்கிறோம். ஆனால் அவர்கள் விதித்திருந்த நிபந்தனைகளால் அந்தத் தொகை முழுவதையும் செலவிட முடியவில்லை. ஆகவே செலவழிக்கப்பட்ட தொகைக்கு மட்டும் வட்டி கட்ட மத்திய அரசின் மூலமாக உலக வங்கியைக் கேட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, உலக வங்கியிடம் நாம் தெரிவித்த யோசனைகளின்பேரில் அவர்கள் பல விளக்கங்களைக் கேட்டு, நாம் விளக்கம் கொடுத்திருக்கிறோம். அதன் காரணமாக நடைமுறை விதிகள் யாவும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, மேற்கொண்டு கடன் உதவி பெறுவதில் கஷ்டமும் இல்லை; தடங்கலும் இல்லை. இப்போது வேகமாக கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் ஓராண்டிற்குள் 26 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு முடிந்துவிடும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்

திரு. அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாம் உலக வங்கியிடமிருந்து கடன் வாங்கும்போது அவர்கள் பல நிபந்தனைகளை விதித்துத்தான் கடன்